# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## மூன்றாம் தவணைப்பரீட்சை 2025

| தரம் : 10 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I<br>Communication and Media Studies I | நேரம் :<br>3 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 87 \| T \| I | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடங்கள் |

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய கட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

**பின்வரும் வினாக்களில் மிகப் பொருத்தமானவற்றினைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொடர்பாடல் செயன்முறையில் செய்தியைப் பெறுபவர்
   1) ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம்
   2) ஒரு தனிநபர் அல்லது குழு
   3) ஒரு தனிநபர், ஒரு குழு அல்லது நிறுவனம்
   4) தனி நபர்

02. சொல் சாராத் தொடர்பாடலுடன் தொடர்புபடாத அம்சம்
   1) கண் தொடர்பு 2) பேசுதல் 3) உடல் அசைவுகள் 4) சமிக்ஞைகள்

03. இலங்கையில் தொலைக்காட்சி ஊடகம் ஆரம்பிக்கப்பட்டமையுடன் தொடர்புபட்ட ஒரு முன்னோடி
   1) விக்ரம் ஜவன் 2) டி.எம்.கொலம்பகே
   3) ஷான் விக்கிரம சிங்க 4) சிறிசேன விமலவீர

04. ஹரோல்ட் டீ.லாஸ்வெல்லின்படி தொடர்பாடற் செயன்முறையின் சரியான வரிசைக் கிரமம்
   1) செய்தி, தொடர்பாடல் செய்வர், வழிமுறை, பெறுநர் மற்றும் தாக்கம்
   2) தொடர்பாடல் செய்பவர், மூலம், செய்தி, பெறுநர் மற்றும் தாக்கம்
   3) மூலம், தொடர்பாடல் செய்பவர், செய்தி, பெறுநர் மற்றும் தாக்கம்
   4) தொடர்பாடல் செய்பவர், செய்தி, வழிமுறை, பெறுநர் மற்றும் தாக்கம்

05. கூச்சலிடுதல் பற்றிய தவறான விளக்கம் எது?
   1) அது பல்வேறு அர்த்தங்களையுடையது 2) அது வாய்மொழித் தொடர்பாடலாகும்.
   3) அது குறியீட்டுத் தன்மையானது 4) அது எல்லைகள் கடந்ததாகும்

06. நினைவு மீட்டலை அடிப்படையாகக் கொண்ட மிகப் புராதன தொடர்பாடல்
   1) மேளச்சத்தம் 2) தீ மூட்டுதல்
   3) குகை ஓவியங்கள் 4) மரக்கிளைகளை தொங்கவிடுதல்

07. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் இலங்கையில் பத்திரிகை ஆசிரியரொருவரே அதன் உரிமையாளராக அமைந்திருந்த செய்திப் பத்திரிகை
   1) லக்மினி பஹன 2) ஞானார்த்த தீபம் 3) சிங்கள பௌத்தய 4) தினமின

Past Papers Wiki

08. புலக்காட்சி தடைப்படுவது, செய்தியானது

1) பெறுநர்மையத் தகவல்களை கொண்டிருப்பதால்

2) தனியே ஒரேயொரு அர்த்தத்தைக் கொண்டிருப்பதால்

3) வெகுசன ஊடகங்கள் வழியாக மாத்திரம் முன்வைக்கப்படும் தகவல்களைக் கொண்டிருப்பதால்

4) அனுபவக் களத்துடன் பொருந்தியிராத தகவல்களைக் கொண்டிருப்பதால்

09. புகைப்படமெடுத்தலில் படைப்பாக்கத்திற்காக படச்சட்டகமொன்றில் பொருட்கள் பொருத்தமாக அமைப்பொழுங்கு செய்யப்படுவது

1) உருவகப்படுத்தல் அல்லது ஒருங்கிசைதல்

2) குவியப்படுத்தல்

3) ஒளி அளவு

4) காட்சிப்புல ஆழம்

10. ஊடக நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபையில் தலைமை நபராக இருப்பவர்

1) தலைவர்
2) பிரதம நிறைவேற்று அதிகாரி
3) பணிப்பாளர் நாயகம்
4) பொது முகாமையாளர்

11. அலுவலகப் பணிக்கு சட்டபூர்வத் தன்மையை வழங்கும் கருவிகள்

1) கணிப்பான், நாணய கணக்கீட்டு இயந்திரம்

2) பதவி முத்திரை கருவி, திகதி முத்திரைக் கருவி

3) தபால் முத்திரையிடல் இயந்திரம், கணிப்பான்

4) நாணயக் கணக்கீட்டு இயந்திரம், தபால் முத்திரையிடல் இயந்திரம்

12. கரும்பலகை அல்லது வெண்பலகையை கற்பித்தலுக்குரிய உதவு கருவியாகப் பயன்படு:த்தும் ஆசிரியரொருவரிடம் எது எதிர்பார்க்கப்படுவதில்லை?

1) பலகையைத் துடைத்துச் சுத்தப்படுத்திய பின் பாடப்பகுதியை ஆரம்பித்தல்.

2) பலகையிலுள்ள எழுத்துக்களைப் பார்க்க முடிகிறதா என மாணவர்களிடம் வினாவுதல்

3) எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பலகையில் எழுதியவற்றை அப்படியே விட்டுச் செல்லுதல்

4) எழுத்தின் தெளிவை அதிகரிப்பதற்காக வெவ்வேறு வர்ணங்களைப் பயன்படுத்துதல்

13. வேலையொன்றுக்கான நேர்முகத் தேர்வுக்காக தயார்படுத்திக் கொண்டிருந்த துர்க்காவிடம் அவளது உடையிலும் தோற்றத்திலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென நண்பியினால் அறிவுறுத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் நண்பியின் முக்கிய கவனம் இருந்தது

1) முறைசார் தொடர்பாடலில்
2) ஆளுள் தொடர்பாடலில்
3) ஆளிடைத் தொடர்பாடலில்
4) வாய்மொழிசாராத் தொடர்பாடலில்.

14. சகல மதங்களுக்கும், தேசங்களுக்கும் மதிப்பளித்தல் சட்டபூர்வமான தன்மை, மரியாதை, வாக்குரிமை ஆகிய விடயங்கள் நேரடியாகத் தொடர்புபடுவது

1) மனித உரிமைகளுக்காக
2) ஜனநாயகத்துக்காக
3) பிரஜாவுரிமைக்காக
4) இனவாதத்துக்காக

15. திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பின் போது ஒப்பனை, ஆடையணிகள் அரங்கமைப்பு என்பவற்றைத் தொடர்ந்து பேணுவதற்கு மிகவும் பயன்படக் கூடியது

1) படத்தொகுப்பு
2) நிலைத்த புகைப்படக்கலை
3) இயக்குநரின் வகிபாகம்
4) எழுத்துருவின் தெளிவு

16. ரவி இயக்கி இசையமைத்திருந்த ஒரு குறுந் திரைப்படத்தை வகுப்பறையினுள் காட்சிப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு அவசியம் பயன்படுத்தப்பட வேண்டிய உபகரணம்

1) மேந்தலை எறிவை 2) வழுக்கி எறிவை

3) தோற்றுருப் பெருக்கி 4) பல்லூடக எறிவை

17. உங்கள் கையிலுள்ள ஓர் ஆவணத்தை அலுவலக இலச்சினையுடன் விரைவாக தொலைவில் உள்ள ஓரிடத்துக்கு அனுப்புவதற்குப் பயன்படுத்தத்தக்க உபகரணமாவது

1) டிஜிற்றல் பிரதியெடுக்கும் இயந்திரம் 2) தபால் முத்திரையிடல் இயந்திரம்

3) இலத்திரனியல் பேஜர் 4) தொலைநகல் இயந்திரம்

18. சீனா, கொரியா, ஜப்பானிய எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.

1) முன் மானுட மொழிகளிலிருந்து வளம் பெற்றவை

2) மேலத்தேய மொழிகளின் வேர்களிலிருந்து வளம் பெற்றவை

3) பட எழுத்துக்கள் அல்லது சித்திர எழுத்துக்களாக வளர்ச்சியடைந்தவை.

4) பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டு எழுத்து மொழியாகின.

19. அரச ஆளுகை தொடர்பாக தகவல்களைக் கல்வெட்டுக்களில் பதிப்பிப்பது எந்த அடிப்படைத் தொடர்பாடல் வடிவத்துடன் தொடர்புபட்டது?

1) வாய்மொழி சாராத் தொடர்பாடலுடன் 2) குழுத் தொடர்பாடலுடன்

3) எழுத்துத் தொடர்பாடலுடன் 4) ஆளிடைத் தொடர்பாடலுடன்

20. வகுப்பின் அனைத்து மாணவர்களாலும் முன்னரே விரிவாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை முன்வைப்பது வகுப்பறைச் செயற்பாடாகக் காணப்பட்டது. இதற்கு மிகப் பொருத்தமான ஊடக உபகரணம்

1) கரும்பலகை 2) அறிவித்தல் பலகை 3) வெண்பலகை 4) பக்கம்புரட்டி

21. நிலைத்த புகைப்படமொன்றைப் பதிவு செய்வதற்கு அவசியமான கூறு எது?

1) ஒளி 2) கணினி 3) நினைவுப் பதிவு அட்டை 4) புகைப்படச்சுருள்

22. செய்திப் பத்திரிகையொன்றின் சினிமா மற்றும் நாடகப் பக்கத்திற்குப் பொறுப்பானவர் யார்?

1) பிரதம ஆசிரியர் 2) பிரதி ஆசிரியர்

3) சித்திரிப்புக் கட்டுரைக்கான ஆசிரியர் 4) செய்தி ஆசிரியர்

PAST PAPERS WIKI

23. ஆளுள் தொடர்பாடல் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. குறியீட்டுப் பரிமாற்றம் நிகழ்த்தல்

B. வகிபாகங்கள் பரிமாறப்படுவது அவதானிக்கப்பட முடியும்.

C. பின்னூட்டம் எதிர்பார்க்கப்பட முடியும்.

D. தனக்குள் உரையாடுவதற்கான வாய்ப்பு காணப்படுதல்

மேற்படி கூற்றுக்களில்

1) Aயும் B யும் உண்மையானவை

2) Bயும் C யும் உண்மையானவை

3) Cயும் D யும் உண்மையானவை

4) A, B, C மற்றும் D அனைத்தும் உண்மையானவை.

24. பிரதான வீதியை நோக்கியிருக்கும் சனசஞ்சாரம் மிக்க பகுதியில் உள்ள தனது வீட்டின் முன்பக்கத்தில் கண்காணிப்பு கமெரா (CCTV) ஒன்றினைப் பொருத்த ரவி தீர்மானித்தார். அதன் மூலம் கிடைக்கும் பிரதான ஆதாயம்

1) செய்தி அறிக்கைக்கு விபத்துக்கள் பற்றிய காட்சிகளை வழங்குதல்

2) சூழல் மாற்றங்கள் பற்றிய அறிக்கைகளைப் பெறுதல்

3) பயணம் செய்வோரை அவதானித்தல்

4) அவரது வீட்டின் பாதுகாப்புத் தொடர்பான நம்பகரமான தகவலைப் பெறல்.

25. நபகரகத் தொடர்பாடலுக்கு எடுத்துக்காட்டாக அமைவது

1) சுயு எண்ணக்கரு உருவாக்கம் 2) எச்சரிக்கை விடுத்தல்

3) உரையாடல் 4) குறைகூறல்

26. “குமார் பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட கவிதை ஒன்றை வாசித்து ஒருவித உணர்வு நிலைக்கு உட்பட்டான். நாளடைவில் புதிதாகக் கவிதை புனையும் செயற்பாட்டில் ஈடுபட தூண்டப்பட்டான். இச்சம்பவம் தொடர்புபடும் ஊடக பிரதிநிதித்துவ எண்ணக்கரு

1) சமூக படிம எண்ணக்கரு 2) ஆண் - பெண் பால் சமத்துவ எண்ணக்கரு

3) கட்டுருவாக்க எண்ணக்கரு 4) இரசனை உணர்வு எண்ணக்கரு

27. இரு நபரிடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போது பயன்படுத்தப்பட்ட சொற்களின் கருத்தை விளங்கிக் கொள்வதில் இடர்கள் ஏற்பட்டதுடன் கிரகித்துக் கொள்வதிலும் இடர்கள் ஏற்பட்டன. இந்நிலையை விபரிக்கும் தொடர்பாடல் மாதிரி

1) வில்பர் ஷ்ராம் 2) டேவிட் பெர்லோ

3) ஷெனோன் மற்றும் வொரன் வீபர் 4) லாஸ்வெல்

28. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை

1) குறுந் தொடர்பாடல் 2) அகமுகித் தொடர்பாடல்

3) வெகுசனத் தொடர்பாடல் 4) ஆளிடைத் தொடர்பாடல்

29. பின்வருவனவற்றுள் புதிய ஊடகத்திற்கு (New Media) எடுத்துக் காட்டுக்களாக கொள்ளக் கூடியவை

1) டுவிட்டர், முகப்புத்தகம், Blogs,. ஸ்கைப் (Skype)

2) வானொலி, டுவிட்டர் (Twitter) தொலைபேசி, சினிமா

3) ஸ்கைப் (Skype) டுவிட்டர், முகப்புத்தகம், தொலைக்காட்சி

4) ஈமெயில் (email) வெப்சைட் (Website) பத்திரிகை, டுவிட்டர்

30. சொற்களஞ்சிய விருத்தி

முன்னாயத்தம்

செவிமடுத்தல் திறன்

மேற்கூறப்பட்ட அம்சங்கள் தொடர்பாடல் வடிவம்

1) வாய்மொழித் தொடர்பாடல் 2) எழுத்துத் தொடர்பாடல்

3) வாய்மொழி அற்ற தொடர்பாடல் 4) கட்புலத் தொடர்பாடல்

31. “செய்திகளைக் கொண்டுவரும் முதன்மையாளன்” என அழைக்கப்படும் வெகுசன ஊடகம்

1) தொலைக்காட்சி 2) வானொலி

3) பத்திரிகை 4) துண்டுப்பிரசுரம்

32. நபரிடைத் தொடர்பாடலில் ஊடுகடத்தியாகப் பயன்படக் கூடியது

1) செல்லிடப் பேசி, மின்னஞ்சல் 2) ஒலிபெருக்கி, இணையம்

3) கையேடு, இணையம் 4) இணையம், செல்லிடப் பேசி

33 – 36 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

| | | |
|---|---|---|
| A - சுவரேடுகள் | B – சித்திரம் | C – வீதிச் சமிக்ஞைகள் |
| D - சிட்டிகை ஒலி | E – அதான் ஒலி | F - மெல்லிசை |
| G - வானொலி | H - கையேடுகள் | I - தீ |
| J - மரக்குற்றிகள் | K - புத்தகம் | L - புகை |
| M - காண்டாமணி | N - சங்கீதம் | O - விலங்குகளின் ஓசை |
| P - வெவ்வேறு இசை சமிக்ஞைகள் | | |

33. மரபு ரீதியான கட்புல ஊடகங்களின் தொகுதி

1) BCEM 2) BIJL 3) AEJL 4) BIJN

34. மரபு ரீதியான செவிப்புல ஊடகங்களின் தொகுதி

1) DEFJ 2) DEHI 3) DEMO 4) DEOL

35. நவீன ரீதியான கட்புல ஊடகங்களின் தொகுதி

1) BIHL 2) ACHK 3) ACDK 4) CDEM

36. நவீன ரீதியான செவிப்புல ஊடகங்களின் தொகுதி

1) ACHK 2) BCHK 3) LMNO 4) FGNP

37 வானொலியைக் கண்டுபிடித்த அறிஞர் பின்வருவனவற்றுள்

1) மார்க்கோணி 2) கிரகம்பெல் 3) சார்ள்ஸ் பபேஜ் 4) மோர்ஸ்

38. ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகளில் உள்ளடங்காதது

1) பின்னூட்டம் உடனுக்குடன் பெற முடியும்.

2) உயிரோட்டம் மிக்க தொடர்பாடல் வகை

3) கருவிகள் வழியாகவும் இடம்பெறும்

4) தொடர்பாடல் செயன்முறையில் தடைகள் அதிகம் காணப்படும்.

39. சாதாரண தபாலுக்கு பதிலாக மின்னஞ்சலைப் பயன்படுத்தும் அளவு அதிகரித்து வருவதாக ஆய்வின் மூலம் அறியப்படுகின்றது. இதற்கான காரணங்களாக அமையக் கூடியது.

A. மின்னஞ்சல் சாதாரண தபாலைவிட விரைவானது

B. மின்னஞ்சல் சாதார தபாலை விட செலவு குறைந்தது

C. மின்னஞ்சல் மூலம் வேறுபட்ட ஆவணங்களையும் அனுப்பக் கூடியது.

1) A, B மட்டும் 2) B, C மட்டும் 3) A, C மட்டும் 4) மேற்கூறிய யாவும்

40. A பகுதியில் உள்ள உபகரணத்தின் பயன்பாடுகளைக் காட்டும் B பகுதியின் சரியான ஒழுங்கு

| A பகுதி | B பகுதி |
|---|---|
| 1. திகதி முத்திரை இயந்திரம் | A ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல். |
| 2. பதவி முத்திரை | B ஆவணங்களுக்குத் திகதியிடல் |
| 3. இலத்திரனியல் அட்டை | C தாள்களை பிரதி எடுத்தல் |
| 4. றோனியோ இயந்திரம் | D சட்டரீதியான உறுதிப்படுத்தல் |

1) BDAC 2) ADBC 3) DBCA 4) BADC

(40 x 1 = 40 புள்ளிகள்)

Past Papers Wiki

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

### மூன்றாம் தவணைப்பரீட்சை 2025

| | | |
|---|---|---|
| தரம் : 10 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் II<br>Communication and Media Studies II | நேரம் :<br>3 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 \| T \| II | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடம் |

**அறிவுறுத்தல்**

- **பின்வரும் வினாக்களில் முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. தொலைபேசி என்பது தொலைவில் இருப்பவர்களுடன் பேசுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தொலைத்தொடர்பு கருவியாகும். இதன் வளர்ச்சியானது தொடர்பாடல் காலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

1) எவ்வகைத் தொடர்பாடலுக்காகத் தொலைபேசி பயன்படுத்தப்படுகிறது?
2) தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் தொடர்பாடல் வடிவங்கள் இரண்டினைப் பெயரிடுக.
3) தொலைபேசியினுடாக நண்பரொருவர் அனுப்பிய குறுஞ் செய்திக்கு நீங்கள் பதிலளிக்கும் போதான சந்தர்ப்பமொன்றுடன் தொடர்புறும் தொடர்பாடல் கூறு யாது?
4) ஆவணப்படுத்தப்பட்ட தகவலை அனுப்புவதற்குத் திறன்பேசியொன்று பயன்படக் கூடுமான இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
5) தொலைபேசி வழியாக மாநாட்டு அழைப்பு (Conference Call) மேற்கொள்ளப்படும் போது எவ்வகைத் தொடர்பாடல் பயன்படுத்தப்படுகிறது?
6) தொலைபேசி வீடீயோ அழைப்பில் ஒருவரால் பயன்படுத்தக்கூடிய வாய்மொழி சாராத் தொடர்பாடல் முறைகளைத் தருக.
7) இணையத் தொடர்பைக் கொண்ட திறன்பேசி வழியாக மின்னஞ்சல் வசதியை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். இம்மின்னஞ்சலை நீர் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 ஐத் தருக.
8) இணையத்தில் வேறுபட்ட வகைத் தகவல்களைத் தேடுவதற்குப் பயன்படக் கூடுமான தேடற் கொறி இரண்டைப் பெயரிடுக.
9) இணையத்தினூடாக நபரொருவர் இணைந்த ஊடக அனுபவத்தைப் பெற முடியும். இணைந்த ஊடகம் என்றால் என்ன?
10) இணைந்த ஊடகத்தினால் ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் சவால்கள் இரண்டைத் தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

Past Papers Wiki

02\. 1) குழுத்தொடர்பாடலின் போது தலைவர் ஒருவர் மக்களுடன் கண்கள் மூலம் தொடர்பு கொள்கிறார். இச்செயலை விபரிக்கப் பயன்படும் பதம் எது?

2) குழுத் தொடர்பாடலின் போது பயன்படுத்தக்கூடிய சாதனங்களைத் தருக.

3) மொழியின் இரட்டைத் தன்மை என்றால் என்ன என்பதனை விளக்கி, மொழியின் இரு வடிவங்களையும் தருக.

4) பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழி வேறுபட்டிருக்கும் பிரதான காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03\. 1) அரசிற்கு உரிமையான செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றை பெயரிடுக.

2) செய்திப் பத்திரிகையின் உரித்துடைமையின் இரு பிரிவுகளும் எவை?

3) செய்திப் பத்திரிகையொன்றில் பின்வரும் தனிநபர்கள் / பிரிவுகள் கொண்டிருக்கும் வகிபங்குகளைச் சுருக்கமாக விபரிக்குக.

அ) பிரதம ஆசிரியர்

ஆ) ஆசிரியர் பீடம்

இ) விளம்பரப் பிரிவு

4) செய்திப் பத்திரிகையொன்றின் உள்ளடக்கத்துடன் தொடர்படைய பின்வரும் விடயங்களின் பயன்பாட்டை விளக்குக.

அ) புகைப்படங்கள்

ஆ) காட்டூண்

இ) சித்திரிப்புக் கட்டுரைகள்

ஈ) விளம்பரங்கள்

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04\. 1) கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஊடக உபகரணங்களின் வகைகள் யாவை?

2) பக்க வடிவமைப்புக்குப் பயன்படுத்தப்படும் மென் பொருள்கள் 2 தருக.

3) கணினி வெளியீட்டுச் செயற்பாட்டின் முக்கியத்துவம் 3 இனைக் குறிப்பிட்டு விளக்குக.

4) இணையத்தளமொன்றை உபயோகிப்பதன் நன்மைள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

05\. 1) ஒருவரை மையமாக வைத்து அவரிடமிருந்து நாலாபுறமும் பலருக்கும் பரவிச் செல்லும் முறைசார் தொடர்பாடல் மாதிரி எது?

2) மேலிருந்து கீழான தொடர்பாடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

3) முறைசார் தொடர்பாடல் செயற்படுகின்ற முறைகளைத் தந்து அவற்றிற்குத் தலா ஒன்று வீதம் உதாரணம் தருக.

4) வாய்மொழித் தொடர்பாடல் அபிவிருத்தி நுட்பங்கள் நான்கைக் குறிப்பிட்டு விளக்குக.

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

06. 1) புகைப்படக் கமராவின் இரு வகைகளைத் தருக.

2) புகைப்படக் கலையில் திட்டமிட்டுப் பெற்றுக் கொள்ளப்படும் புகைப்படங்கள் எவை?

3) காட்சித் தள ஆழ வேறுபாட்டைப் பாதிக்கும் காரணிகள் மூன்றைத் தந்து அவற்றிற்குச் சிறு விளக்கம் தருக.

4) நிலைத்த புகைப்பட இதழியல் கலையினால் அச்சு ஊடகத்தில் கிடைக்கும் நன்மைகள் எவை?

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

07. 1) வெகுசன ஊடகம் சமூகப் பிரதிநிதித்துவம் கற்கையில் உள்ளடங்கும் அம்சங்கள் நான்கைத் தருக.

2) சமூகக் குடியுரிமைப் பிரதிநிதித்துவத்துள் பிரஜை ஒருவரின் பண்புகள்

3) பொருளாதாரப் பிரதிநிதித்துவத்தில் உள்ளடங்கும் அம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக.

4) சிறுவர்கள் அதிகமாகத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு தூண்டப்படுவதால் ஏற்படக் கூடிய நன்மைகள், தீமைகள் இரண்டு வீதம் விபரிக்குக.

( 1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library